www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

VNR7T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - 2024

வகுப்பு 7

கால அளவு: 2.00 மணிநேரம் தமிழ் மதிப்பெண்கள்

பகுதி-1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6

1) திருநெல்வேலி ............ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி

2) 'இடர் ஆழி நீங்குகவே' - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ....

அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

3) மழை சடசடவெனப் பெய்தது இத்தொடரில் அமைந்துள்ளது ..........

அ) அடுக்குத் தொடர் ஆ) இரட்டைக்கிளவி

இ) தொழிலாகு பெயர் ஈ) பண்பாகுபெயர்

4) செல்வத்தின் பயன் ............... வாழ்வு

அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

5) கூடுகட்டத் தெரியாத பறவை ..........

அ) காக்கை ஆ) குயில்

இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி

6) 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் .............. என்பது பொருள்

அ) சுற்றுலா வழிகாட்டி ஆ) சமுதாய வழிகாட்டி

இ) சிந்தனையாளர் ஈ) சட்ட வல்லுநர்

ஆ) பொருத்துக 4x1=

7) கொற்கை - கருணை

8) ஞானம் - ஈகை

9) விதை - முத்துக்குளித்தல்

10) இரக்கம் - விளக்கு

பகுதி-2

இ) ஒரிரு சொற்களில் விடையளிக்க. (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்) 5x2=

11) நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?

12) பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.

13) தாமிரபரணி 'ஆற்றின் கிளை ஆறுகள்' யாவை?

14) நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?

15) உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

16) உலகம் நிலைதடுமாறக் காரணம் என்ன?

17) பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?

ஈ) ஒரிரு தொடர்களில் விடையளிக்க. (ஏதேனும் மூன்று வினாக்கள் மட்டும்) 3x4=

18) உழவுத் தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

19) இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் - ஒப்பிடுக.

20) ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?

21) சாந்தம் பற்றி இயேசுகாவியம் கூறுவன யாவை?

22) நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

www.Padasalai.Net.



www.Trb Tnpsc.Com

## பகுதி-3

**உ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5×2=10**

23) **கலைச் சொல் எழுதுக.**

அ) Simplicity ஆ) Harvest

24) **கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

அ) கன்னியாகுமரி ஆ) பட்டுக்கோட்டை

25) **தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.**

அ) நானும் என் தோழியும் ............. இணைந்து இருப்போம்

(இஞ்சி தின்ற குரங்கு போல/நகமும் சதையும் போல)

ஆ) திருவள்ளுவரின் புகழை ............ உலகமே அறிந்துள்ளது.

(எலியும் பூனையும் போல / உள்ளங்கை நெல்லிக்கனி போல)

26) **சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.**

அ) நெல்லையப்பர் கோவில் ................ உள்ளது?

ஆ) அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் ............?

27) **சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.**

(மேலும், அதுபோல, இல்லையென்றால்)

அ) நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ............... துன்பப்பட நேரிடும்

ஆ) தமிழகத்தில் மழை பெய்து வருகிறது ............. இரண்டு நாள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வுமையம் அறிவிப்பு

28) **கீழ்க்காணும் சொல்லைப் பெயர்ச்சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் பயன்படுத்தித் தொடர்கள் உருவாக்குக.**

ஆ) ஆடு

29) **கீழ்க்காணும் தலைப்பில் கவிதை எழுதுக.**

அ) தன்னம்பிக்கை

## பகுதி-4

**ஊ) அடிபிறழாமல் எழுதுக. 4+2=6**

30) 'மாரியொன்று' எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

31) 'வினையால்' - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

## பகுதி-5

**எ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி. 1×6=6**

32) டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

33) பயணம் கதையைச் சுருக்கி எழுதுக.

## பகுதி-6

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி. 1×6=6**

34) கட்டுரை எழுதுக. ஒற்றுமையே உயர்வு

35) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

- - - - - - - -

www.Padasalai.Net

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com